செய்தி வெளியீடு எண்: 157 நாள்: 02.03.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 1.3.2018 அன்று தலைமைச் செயலகத்தில், கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரத்தில் 1 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், கன்னியாகுமரி, காஞ்சிபுரம், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 6 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கான 5 விடுதிக் கட்டடங்கள் மற்றும் ஒரு கூடுதல் விடுதிக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் இடைநிற்றல் இன்றி கல்வி கற்றிடவும், அவர்தம் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும், நல்வாழ்விற்கும், புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், விடுதிக் கட்டடங்கள் கட்டுதல், கல்வி உதவித் தொகைகள் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரத்தில் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன் 1 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர்களுக்கான விடுதிக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன் 1 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறுபான்மையினர் நலக் கல்லூரி மாணவியருக்கான விடுதிக் கட்டடம்;

வேலூர் மாவட்டம், சோளிங்கரில் 50 மாணவியர் தங்கும் வசதியுடன் 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதிக் கட்டடம் மற்றும் வாலாஜாபேட்டையில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன் 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியருக்கான கூடுதல் விடுதிக் கட்டடம்; காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரத்தில் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன் 1 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்;

விழுப்புரம் மாவட்டம், சின்னசேலத்தில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன் 1 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதிக் கட்டடம் மற்றும் எண்டியூரில் 50 மாணவர்கள் தங்கும் வசதியுடன் 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதிக் கட்டடம்;

என மொத்தம் 7 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கான 6 விடுதிக் கட்டடங்கள் மற்றும் ஒரு கூடுதல் விடுதிக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி. சீ. வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர் திரு. ஆ. கார்த்திக்,இ.ஆ.ப., சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் திரு.மா.வள்ளலார்,இ.ஆ.ப., மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை இயக்குநர் திரு.வா. சம்பத், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 2.3.2018**